Valvai Branch Library

WYMAN
ENGLISH LANGUAGE INSTITUTE
'TOEFL' Classes
For 86-87 Exams
WEEK DAYS
Mon. | Friday;
11.30 a.m – 1.00 p.m.
WEEK ENDS
Sat.|Sunday;
9.00 a.m. – 10.30 a.m.
Instructor 12, Wyman Rd.,
S.B.IYAR Nallur.

Registered as a Newspaper

உதயன்

விலை ரூ.1/-

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

WYMAN
ENGLISH LANGUAGE INSTITUTE
ENGLISH READING PRACTICE CLASSES
(Books Year 9th. 10th.11th,12th)
WEEK DAYS
Mon, | Friday; 3–4 p.m.
WEEK ENDS
Sat. | Sunday; 6–7 a.m.
10.30–11.30a.m.
Instructor 12. Wyman Rd.,
S. B. IYAR Nallur.

சுடர்:- 1 யாழ்ப்பாணம் அக்ஷய ஆண்டு ஆடி மீ 23 வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1406 ஜுல்ஹஜ் பிறை 1 (08-08-1986) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர்:- 225

இந்திய அரசு-கூட்டணி தயாரித்த

நகல் யோசனையை

ஜனாதிபதியிடம் இன்று

டிக்ஸிற் கையளிப்பார்

பதிலின் தன்மையைப் பொறுத்தே பேச்சு நிச்சயமாகும்

கொழும்பு, ஆக. 8

இந்திய அரசின் அனுசரணையுடன் திருத்தப்பட்ட நகல் யோசனைகளை இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் இன்று ஜனாதிபதி ஜெயவர்த்தனாவிடம் சமர்ப்பிப்பார்.

அதற்கு அரசு கொடுக்கும் பதிலின் தன்மையைப் பொறுத்தே தமிழர் விடுதலைக் கூட்டணி—அரசு பேச்சுவார்த்தை நிச்சயமாகும். அதாவது கொழும்பு வருவதற்கான திகதி நிர்ணயிக்கப்படும்.

செவ்வாய்க்கிழமை கொழும்பு வந்த இந்திய தூதர் திரு. டிக்ஸிற், ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு நேரம் கேட்டிருக்கின்றார்.

இன்னும் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை. இன்று வெள்ளிக்கிழமை காலை அல்லது மாலையில் திரு. டிக்ஸிற் ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்திப்பார்.

அப்போது தன்னுடன் கொண்டு வந்த திருத்தப்பட்ட நகல் யோசனைகளை ஜனாதிபதியிடம் திரு. டிக்ஸிற் சமர்ப்பிப்பார்.

அந்த யோசனைகளுக்கு இலங்கை தரப்பில் திருப்தி கிடைக்கும் பதிலின் தன்மையைப் பொறுத்து கூட்டணித் தலைவர்களின் வருகைக்கான திகதி நிர்ணயிக்கப்படும்.

இப்படி அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

இரண்டாம் கட்டப் பேச்சுக்களை நடத்துவதற்காகத் தமிழர் விடுதலைக் கூட்டணி, இந்திய அரசு மற்றும் அரசியல் நிபுணர்களின் உதவியுடன் இலங்கை அரசு யோசனை

(4-ஆம் பக்கம் பார்க்க)

போராளி அமைப்புகளுடன் கூட்டணித் தலைவர்கள் பேச்சு

சென்னை, ஆக 7

திருத்தப்பட்ட யோசனைகள் குறித்து தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள், தமிழ்ப் போராளி அமைப்புக்களுடன் பேச்சுக்கள் நடத்தி வருகின்றனர்.

இப்படி சென்னையில் இருந்து கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஈழம் தேசிய விடுதலை முன்னணியில் அங்கம் வகிக்கும் மூன்று விடுதலை அமைப்புக்களுடன் கூட்டணித் தலைவர்கள் பிரச்சிக்கப்படுகிற முறையில் திருத்தப்பட்ட யோசனைகள் பற்றிய பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளனர்.

இப்படி அச்செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன. (இ-எ)

எஸல

பெரஹராவுக்கு பலத்த பாதுகாப்பு

கொழும்பு, ஆக.8

கண்டியில் தற்போது நடைபெறும் எஸல பெரஹராவுக்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

2,560 பொலீஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

33 மோட்டார் சைக்கிள்கள், 16 ஜீப்புகள்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

திருமலைத் துறைமுக அதிகாரசபை

மட்கோவ் இராணுவ பிரிவுக்கு பாதுகாப்பு

திருகோணமலை ஆக 8

திருகோணமலைத் துறைமுக அதிகாரசபையின் மட்கோவ் பிரிவு நேற்று முதல் இராணுவத்தினரின் பாதுகாப்பினுள் கொண்டு வரப்பட்டுள்ளது.

இப்பணியை இரவு பகலாக இராணுவத்தினர் காவல் புரிகின்றனர்.

நிர்வாகிப் பகுதியில் இருந்து வந்த தீவிரவாதிகள் மட்கோவ் பிரிவில் உள்ள வாகனங்களைக் குண்டு வைத்துத் தகர்த்தனர் என்றும் வாகனங்களிற் தொலைத் தொடர்பு சாதனங்கள் உட்பட

(4 ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி ஆஸ்பத்திரி

ஊழியரை கடமைக்கு திரும்புமாறு இராணுவ உயரதிகாரி கேட்கிறார்

யாழ்ப்பாணம், ஆக 8

கிளிநொச்சி ஆஸ்பத்திரியை மீண்டும் நடக்கு மாறும், ஆஸ்பத்திரி ஊழியர்களை உடனடியாக வேலைக்குத் திரும்புமாறும் கிளிநொச்சி இராணுவ உயர் அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் நடைபெற்ற போராளிகள்-இராணுவக் மோதலின்போது கிளிநொச்சி ஆஸ்பத்திரி ஸ்தம்பித நிலையை அடைந்தது.

இங்கு நடைபெற்ற தாக்குதல்களினால் கட்டடங்கள் சேதமானதுடன் ஆஸ்பத்திரி மருந்து வகைகளும் களவாடப்பட்டன.

இதனை அடுத்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் வேலை செய்த அனைத்து ஊழியர்களையும் யாழ் சுகாதாரத் திணைக்களம் யாழ் மாவட்டத்திலுள்ள வேறு ஆஸ்பத்திரிகளுக்கும் இடமாற்றம் செய்தது.

எனினும் கிளிநொச்சி ஆஸ்பத்திரியை மீண்டும் திறக்குமாறும் ஊழியர்

(4ஆம் பக்கம் பார்க்க)

மட்டக்களப்பில் கடத்தப்பட்டோரில் அறுவர் நேற்றுவிடுதலை

மட்டக்களப்பு, ஆக 8

அமைச்சர் தேவநாயகத்தை வரவேற்றதற்காக கடத்தப்பட்ட எண்மரில் 6 பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

ஒருவர் மட்டுமே இன்னும் விடுவிக்கப்படவில்லை.

கடத்தப்பட்டவர்களில் ஒருவரான பாடசாலை அதிபர் திரு. சிவலிங்கம் நேற்று முன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டார் என்பது தெரிந்ததே.

மகிழடுதீவு மாவட்ட அபிவிருத்திச் சபை முன்னாள் தலைவர் திரு. சம்பந்தமூர்த்தியின் எண்பது வயது தந்தையாரான திரு. சின்னத்தம்பி போடியாரே இன்னும் விடுவிக்கப்படாதவர்.

நேற்று விடுவிக்கப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

பல்கலைக்கழக மாணவர் நேற்று மறியல்

யாழ்ப்பாணம், ஆக 8

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று மறியல் போராட்டம் நடத்தினர்.

நேற்று முன்தினம் யாழ் பல்கலைக் கழகத்தின் முன்னால் உள்ள வீதியில் புதிய மாணவி ஒருவரை ருக்கிங் செய்தனர் என்று கூறப்படும் மூன்று மாணவர்களை தமிழீழ விடுதலைப் புலிகள் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

இச் சம்பவத்தை அடுத்தே நேற்று யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் மறியல் போராட்டம் செய்ததுடன் வகுப்புகளையும் பகிஷ்கரித்தனர்.

வைதான மூவருக்கு நேற்று இரவு கடுமையாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-10)

முச்சந்தி முரளி

அப்பிடித்தானே செய்வினம்!! அவை எப்பவும் வெள்ளம் வந்த பிறகு (அணையும் கட்டுறதில்லை) மண் போடுற பரவணி தானே . . . !!

சிறப்புச் செய்தி

சிரேஷ்ட அமைச்சர் விரைவில் ராஜினாமா?

உறவினர் மீது ஊழல் குற்றச்சாட்டு

கொழும்பு, ஆக. 8

அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் ராஜினாமாச் செய்வாரா?

அவரை ராஜினாமாச் செய்யும்படி அரசாங்க மேலிடம் வற்புறுத்தியுள்ளதாக மிக நம்பிக்கையான வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

அந்த சிரேஷ்ட அமைச்சரின் மிக நெருங்கிய உறவினர் ஒருவர் சம்பந்தமாக ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவுக்கு அனுப்பப்பட்ட முறைப்பாட்டுடன் தொடர்புடையதே அந்த அமைச்சரை ராஜினாமாச் செய்யும்படி அரசு மேலிடம் நெருக்கி இருப்பதாக கொழும்பு அரசியல் வட்டாரங்களில் பரபரப்பாகப் பேசப்படுகிறது.

அந்த அமைச்சரின் நெருங்கிய உறவினருக்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள முறைப்பாடு தான் முதலில் ஜனாதிபதி விசேட ஆணைக்குழுவின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப் படவிருப்பதாகவும் தெரிகிறது. (அ-எ)

ஜனாதிபதி--பிக்குகள் சந்திப்பு

கொழும்பு, ஆக 8

பௌத்த பிக்குகள் குழு ஒன்று நேற்று மாலை ஜனாதிபதி ஜெயவர்த்தனாவைச் சந்தித்து மாகாணசபை யோசனைகள் பற்றி பேசியது.

சோ. ஜோன்டி கிஸ்னர அரங்கில் நடந்த இச் சந்திப்பின் போது 3 சிங்களப் பத்திரிகைகளின் செய்தியாளர்கள் அனுமதிக்கப்படவில்லை. (அ-எ)

எக்நாயக்காவின் ஆயுள் தண்டனை 5 வருடமாக குறைப்பு!

கொழும்பு, ஆக.8

விமானக் கடத்தற் குற்றச்சாட்டில் சேமான எக்நாயக்காவுக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனை 5 வருட சிறைத் தண்டனையாக குறைக்கப்பட்டது.

மேல்முறையீட்டு நீதிமன்றம், விசேட நீதிமன்றத்தில் தீர்ப்பை நேற்று ஊர்ஜிதம் செய்தது.

ஆனால் தண்டனையைக் குறைத்தது.

முதலாம் குற்றச் சாட்டுக்கு 5 ஆண்டுகளும் 2ஆம் குற்றச் சாட்டுக்கு 3 ஆண்டுகளும் சிறைத்

(4-ஆம் பக்கம் பார்க்க)

3 மாணவர் விசாரணையின் பின் தண்டிக்கப்பட்டு விடுதலை

யாழ் பல்கலைக் கழக ருக்கிங் சம்பவம் குறித்து புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக.8

யாழ் பல்கலைக்கழகத்தில் "ருக்கிங்" செய்தார்கள் என்று கூறப்படும் மூன்று மாணவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் விசாரிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் நேற்று விடுத்த அறிக்கை வருமாறு:-

தமிழ்ப் பகுதிகளில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ள இன்றைய நிலைமையால் எங்கும் நடமுறையிலுள்ள சமூக விரோத செயற்பாடுகளும் அராஜகங்களும் இடம் பெறுவதை காணக் கூடியதாகவுள்ளது.

சமுதாய ரீதியான ஒழுங்கு, கட்டுக்கோப்பு கலைந்து வருகின்றன-இதேநிலையில் கல்வி ரீதியாக எடுத்துக்கொண்டால் மாணவர்கள், ஆசிரியர்களின் வழிகாட்டலுக்கு கட்டுப்படாமல் தன்விச்சையாகத் தாறுமாறாகத் தனமாக ஒழுங்கீனமாக ஒரு சில இடங்களில் நடப்பதை அவதானிக்க முடிகிறது.

இதே போன்றே சமுதாயரீதியில் ஒழுங்கு மீறல்கள் மேலோங்கி வருகின்றன. மேலும் "ருக்கிங்" போன்றவையில் ஒரு சில தீயசக்திகள் தம் பாலியல் ரீதியான வக்கிரங்களை தீர்த்துக் கொள்வதை அவதானிக்க

(4-ஆம் பக்கம் பார்க்க)

தேவநாயகத்துக்கு உப ஜனாதிபதி பதவி வேண்டும் என எழுதியவர் கடத்தப்பட்டார்

மட்டக்களப்பு, ஆக 8

வாழைச்சேனை உரமி அரச அதிபர் அலுவலக பிரதம எழுதுவினைஞராக திரு. நி ஞானமுத்து இனந்தெரியாத நபர்களினால் கடத்தப்பட்டு விசாரணையின் பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டார்.

தமிழ்ப் பத்திரிகையில் பிரசுரமான கடிதம் ஒன்று தொடர்பாகவே இவர் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

அக்கடிதத்தில் இவர், அமைச்சர் தேவநாயகம் உப ஜனாதிபதியாக நியமிக்கப்பட வேண்டும் என்று எழுதியிருந்தாராம்

திரு ஞானமுத்து, வாழைச்சேனை வார்ப்பணி மன்றத்தின் தலைவருமாவார். (இ-எ-21)

அவர்கள் தேடிய பிரிய உயிர்கள்!

யாழ்ப்பாணம், ஆக. 8

ரோந்து சென்ற சிப்பாய்களும் ஊர்காவல் படையினரும் தங்களுக்குப் பிரியமான உயிர்களைத் தேடினர்.

இச்சம்பவம் புதன் கிழமை வவுனியா 'குடுகண்டபுலவு' என்ற இடத்தில் நடைபெற்றது.

அவர்கள் தேடிய அந்தப் பிரிய உயிர்கள் மனிதரல்ல. ஆடுகளும், கோழிகளுமாகும்.

சம்பவம் பற்றி அறிய வருவதாவது,

புதன்கிழமை பகல் இரண்டு மணி அளவில் வவுனியா 'கடுகண்டம்' இராணுவமுகாமிலிருந்து ஜீப்பில் புறப்பட்ட சிப்பாய்களும், ஊர்காவல் படையினரும் குடுகண்டபுலவு என்ற முஸ்லிம் கிராமத்தில் ரோந்து

(4 ஆம் பக்கம் பார்க்க)

சுபநேரம்

08 –8 –1986
வெள்ளிக்கிழமை

சுபநேரம்:-
6.04 முதல் 7.34 வரை
ராகுகாலம்:-
10.34 முதல் 12.04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்
ஆடிபபூரம்

தந்திரிமலைப் பகுதியில் ஊர்காவல் படையினர் சுற்றி வளைக்கப்பட்டு கைது

யாழ்ப்பாணம், ஆக. 8

வவுனியா மாவட்டத்தில் உள்ள தந்திரிமலைக் கிராமத்தை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் மக்கள் விடுதலைப் படைப் போராளிகள் சுற்றிவளைத்த பொழுது பல ஊர்காவற் படையினர் கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக ஈ. பி. ஆர். எல். எப் இயக்கம் விடுத்த செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்த 4 ஆம் திகதி மக்கள் விடுதலைப் படையினர் இப் பகுதியைச் சுற்றிவளைத்த போது கைது செய்யப்பட்ட ஊர்காவற்படையிடம் இருந்து இரு துப்பாக்கிகளும் தோட்டாக்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

எச்சரிக்கை செய்யப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

இச் சம்பவத்திற்கோ அவ்விடம் வந்த இரா

(4-ஆம் பக்கம் பார்க்க)

அம்பாறையில் இருந்து இப்படி ஓர் எச்சரிக்கை

கல்முனை, ஆக 8

முஸ்லிம்களுக்கு செந்தமான அம்பாறை மாவட்டத்தில் இருந்து இம்மாத முடிவிற்குள் தமிழ் சிங்கள மக்கள் வெளியேறி விடவேண்டும்

"முஸ்லிம் இராணுவம்" என்ற பெயரில் இப்படி ஒரு துண்டுப் பிரசுரம் வெளிவிடப்பட்டுள்ளது

'எச்சரிக்கை' என்ற தலைப்பில் இந்த துண்டுபிரசுரம் வெளிவிடப்பட்டுள்ளது.

"எமது எச்சரிக்கையை மீறி அம்பாறை மாவட்டத்தில் தொடர்ந்து இருப்பவர்களின் உடைமைகளுக்கும் உயிர்களுக்கும் ஆபத்து ஏற்படும்"—என்றும் பிரசுரத்தில் கூறப்பட்டுள்ளது

அம்பாறை அரச அதிபர், அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர், பொத்துவில் வாலிபர் சங்கத் தலைவர் ஆகியவர்களுக்குத் துண்டுப் பிரசுரம் அனுப்பி வைக்கப்பட்டன

(இ-எ-84)

சுன்னாகத்தில் கொள்ளை

யாழ்ப்பாணம், ஆக. 8

சுன்னாகம் கடவையடியில் உள்ள ஒரு வீட்டில் இனந்தெரியாதவர்கள் கடந்த புதன் இரவு தங்கச் சங்கிலி, மோதிரம் முதலியவற்றை கொள்ளையிட்டதாகத் தெரிகிறது.

துப்பாக்கி முனையில் இக் கொள்ளை இடம் பெற்றதாம்.

இரண்டு மோதிரங்கள், இரண்டு சங்கிலிகள் கொள்ளை இடப்பட்டன என்று தெரிகிறது. (இ-எ)

ஓய்வூதிய கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஆக 8

ஆஸ்பெட் மாதத்தான தபால் நிலையங்கள் மூலமாகக் கொடுக்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுகளான நிதிகளைத் தபால் அதிபர் சுகர் அறிவித்துள்ளார்.

பணக் கொடுப்பனவுகள் யாழ் யாழ் கோட்டை வங்கியில் இன்றையில் துரை ஐயா வினாயகமூர்த்தியினால் வழங்கப்படும்.

20-8-861-

யாழ் பாணம், கைதடி, புன்னாலைக்கட்டுவன்.

21-8-861-

வருத்தித்துறை, வல்

(4-ஆம் பக்கம் பார்க்க)

நாளைய சஞ்சீவியில்

யாழ்ப்பாணம் கோட்டையின் சரித்திரப் பின்னணி குறித்து

ம. க. அ. அந்தனிசில்

எழுதும் தொடர் கட்டுரை ஆரம்பமாகிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ் மாவட்டத்தில் 5 லட்சம் பேருக்கு உணவு முத்திரை

குடாநாட்டில் அரைவாசிப்பேர் பெறுவர்

யாழ்ப்பாணம், ஆக 8

இம்முறை யாழ் மாவட்டத்தில் சுமார் 5 லட்சம் பேருக்கு உணவு முத்திரை முன்னெப்படுகிறது

யாழ் மாவட்டத்தில் உள்ள மக்களில் அரைவாசிப்பேர் இம்முறை உணவு முத்திரை பெறுகின்றனர்.

கடந்தகாலங்களில் பெற்றவர்களைவிட இம்முறை ஒருலட்சம் பேருக்கு அதிகமாக உணவு முத்திரை கிடைக்கும்

இவர்களுக்கான முத்திரை விநியோகம் இறுதிக்குள் பெரும்பாலும் முடிந்துவிடும் என சமூக சேவைத்திணைக்கள உதவி நியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்

விநியோகத்திற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை சகல உதவி அரசாங்க அதிபர்கள் மட்டத்திலும் நடைபெற்று வருகின்றன

தற்போது விநியோகிக்கப்படும் உணவு முத்திரைகள் மூலம் ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்களுக்குரிய உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாம். (உ-5)

மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

சட்டவிரோத மின் வயர்களை பொதுமக்களே முன்நின்று எரித்த சம்பவம்

யாழ்ப்பாணம், ஆக. 8

சட்டவிரோத மின் பாவனையாளர்களின் வயர்களைப் பொதுமக்களே முன்நின்று எழற்றி எரித்த சம்பவம் ஒன்று கிராமசேப்பகுதியில் இடம் பெற்றது

சம்பவம்பற்றி அறியப்படுவதாவது:

கடந்த திங்கட்கிழமை மேற்கு வடமராட்சி மின் அதிகாரசபை மின் ஊழியர்களும், மின் அத்தியட்சகரும் சட்டவிரோத மின் பாவனையைத் தடை செய்யும் முகமாக நிமிர் பரிசோதனை ஒன்றை மேற்கொண்டனர்

ஒருபகுதி வீடுகளிலுள்ள சட்டவிரோத மின்வயர்கள் பறிமுதல் செய்யப்பட்டன

தொடர்ந்து மற்றைய பகுதி வீடுகளுக்குச் சென்றபோது கோஷ்டி ஒன்றினால் அவர்கள் தடுக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

அப்பகுதிசட்டவிரோத மின்பாவனை வயர்கள் ஆயுதங்கள் உண்டாக்கிய நிலையில் இருந்த தால் அப்பகுதிக்கான மின்சாரம் உடனே நிறுத்தப்பட்டது

இந்த நடவடிக்கையால் மறுநாள் அப்பகுதிப் பொதுமக்களும், ஸ்தாபனங்களும் முன்வின்று சகல சட்டவிரோத வயர்களையும் எழற்றி வீதியில் போட்டு எரித்தனர்

அதன்பின் அப்பகுதிக்கான மின்சாரம் மீண்டும் வழங்கப்பட்டது (இ-5)

ரூ. 20 லட்சம் செலவில் இந்து கலாசார நிலையம்

மட்டக்களப்பில் அமையும்

கொழும்பு, ஆக. 8

மட்டக்களப்பில் இந்து கலாசார மத்திய நிலையம் ஒன்றை நிறுவுவதற்கு 20 லட்சம் ரூபா பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

இதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு கடந்த புதன் கிழமை நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது

பிரதேச அபிவிருத்தி அமைச்சின் கோரிக்கையின் பேரிலேயே இதற்கான நிதி ஒதுக்கீட்டுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. (உ)

களவுபோன மோட்டார் சைக்கிள்

யாழ்ப்பாணம், ஆக. 8

செல்லையன்று நடைபெற்ற மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் தீர்த்தோற்சவம் பார்க்கச் சென்றவரின் மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது.

பூட்டிவிட்டு சென்றிருந்த இவரது மோட்டார் சைக்கிள் மாற்றுச் சாவி மூலமே திறக்கப்பட்டு திருடப்பட்டதாம்.

வயாவிளானை சேர்ந்த எஸ். வி. எஸ். ராஜன் என்பவரே தனது மோட்டார் சைக்கிளை களவு கொடுத்தவர் ஆவார் (இ-5)

நூல் அறிமுக விழா

யாழ்ப்பாணம், ஆக. 8

கோலோ மகேந்திரன் எழுதிய 'துயிலும் ஒரு நாள் கண்டும்' (நாவல்) 'பிரசவக்கவிகள்' (நிறுவனத்தொகுதி) ஆகிய இருநூல்களின் அறிமுக விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பி.ப 2.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் இராசவிநோதன் பண்டிதத்தில் நடைபெறும்

கட்டைவேலி - நெல்லியடி பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கலாசார கட்டுறவுப் பொருள்நிலைத் தலைவர் திரு. த. சிதம்பரப்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி நா. சுப்பிரமணியனும் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி எம். கே. முருகானந்தனும் கலந்து கொள்வர் (உ)

சாவகச்சேரியில் பசளைப் பரிசோதனை

சாவகச்சேரி ஆக 8

சாவகச்சேரியைச் சேர்ந்த விளைவேலியில் பசளைப்பரிசோதனை மேற்கொள்ளப்படவிருக்கிறது

வி. தர்மலிங்கம் என்பவரது வயலில் 9 பாத்திகளில் குரக்கன்களான பசளைப் பரிசோதனையை நடத்த இருப்பதாக விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. ஜி. டபிள்யூ. இரத்நாயக்கம் தெரிவித்தார்.

உணவு விவசாய தாபனத்தாலும் நேலும் வெங்காயம், பயறு ஆகியவற்றுக்கான பசளைப்பரிசோதனையும் நடைபெற விருப்பதாக அவர் கூறினார். (இ - 31)

உள்ளூராட்சி அமைப்புகளின் ஆயுள் தொடர்ந்து நீடிப்பு?

யாழ்ப்பாணம், ஆக 8

இனப்பிரச்சினை தீர்வுக்கு அரசாங்கம் முன்வைத்துள்ள மாற்று யோசனை அமுல் செய்யப்படும் புதிய சட்டத்தில் வடக்கு — கிழக்கு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலுள்ள மாவட்ட அபிவிருத்திச்சபை, மாநகர சபை, நகரசபை ஆகியவற்றின் ஆயுட்காலம் மேலும் நீடிக்கப்படலாமென தெரியவருகிறது

தென்னிலங்கையில் இதிலிருந்தல்கள் நடைபெறும் போது சில தேய சக்திகள் இனப்பிரச்சினை தீர்வை முன்வைத்து வன்செயல்களை தூண்டிவிடலாமென்ற அபிப்பிராயம் நிலவுவதால் தேர்தல்கள் நடைபெறுமா என்பது சந்தேகமாகவுள்ளது

ஏற்னவே கடந்த வருடத்தில் மாவட்ட அபிவிருத்திச்சபை, மாநகர, நகர சபைகளின் ஆயுட்காலம் அடுத்தவருடம் ஜூலை வரை நீடிக்கப்பட்டது என்பது தெரிந்ததே (உ-21)

வயல் விழா

வட்டுக்கோட்டை ஆக 8

சங்யானை, தொட்டிலடியில் எதிர் வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை 'வயல் விழா' நடைபெறும்

திரு. வீரசிங்கம் என்பவரின் காமத்தில் தொல்புரம் விவசாய போதானாசிரியர் திரு. சதம்பிராசா தலைமையில் இந்த நிகழ்ச்சி நடைபெறும்

யாழ் உதவி விவசாயப் பணிப்பாளர் திரு. ச. கிருஷ்ணபிள்ளை பிரதம விருந்தினராகவும், தொழில் அதிபர் திரு. க. கனகராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தவுள்ளனர்.

மேற்படி 'வயல் விழா'வுக்கான சகல ஏற்பாடுகளையும் பண்டாரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன் மேற்கொண்டுள்ளார். (உ-161)

நன்றி மறவாத பண்பு மாணவர் மத்தியில் வளரவேண்டும்

வட்டுக்கோட்டை ஆக 8

ஊரவர், உயர்ந்தவர், உறவினர் என்ற காரணங்களை நோக்காது கடமை உணர்வோடு கண்ணியமான முறையில் பாடசாலை வளர்ச்சிக்கும் மாணவர்களது கல்வி முன்னேற்றத்திற்கும் தொண்டாற்றிய ஆசிரியர்கள் அனைவருக்கும் சேவை நலன் பாராட்டு விழா நடாத்த மாணவர்கள் முன்வரவேண்டும்

சித்தன்கேணி கணேச வித்தியாலயத்தில் உப அதிபராகக் கடமை யாற்றி சேவையிலிருந்து இளைப்பாறிய ஆசிரியை திருமதி பாக்கியலட்சுமி செல்லையாவுக்கு சேவை நலன் பாராட்டுவிழா அண்மையில் நடைபெற்றது

தலைமையுரை நிகழ்த்திய வித்தியாலய ஆதிபர் திரு. நா. தங்கரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. தங்கரத்தினம் தொடர்ந்து உரையாற்றும் போது ஆசிரியர்கள் மாணவர்களிடம் எந்த வேறுபாடும் காட்டாது புனிதமான முறையில் இறை பணியாகக் கருதி தமது சேவையைச் செய்ய வேண்டும் என்றார்.

ஆசிரியர்கள் சார்பில் திருமதி பூமணி சேலையுதம்பிள்ளை, செல்வி சே. வி. சரஸ்வதி, திருமதி தவராணி சச்சிதானந்தம், திருமதி இந்திராணி ஆறுமுகராஜா, திரு. நா. நியாகரராசா, திருமதி கலாவதி டாக்டர், திரு. க. நல்லையா ஆகியோரும் மாணவர்கள் சார்பில் செல்வன் எஸ். குகநேசன், செல்வி மயூரா சிவஞானமூர்த்தி, செல்வி நிரஞ்சலா கந்தசாமி, ஆகியோரும் உரை நிகழ்த்தினர்

திருமதி பா. செல்லையா பதிலுரை நிகழ்த்தினார் (இ - 161)

யாழ். மாவட்டத்தில் காப்புறுதி நஷ்டஈடு மூன்றுவருடமாக இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 8

கடந்த மூன்று வருடகாலத்தினுள் உள்செயலின்போதோ, இராணுவ நடவடிக்கையின் போதோ யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிந்து போன, சேதமுற்ற வீட்டடங்கள் கடைகளுக்கு காப்புறுதி நஷ்டஈட்டுப் பணம் வழங்கப்படவில்லை,

காப்புறுதி நஷ்டஈடு பெறுவதற்காக வடக்கிலிருந்து அனுப்பப்படும் விண்ணப்பங்களுக்கு கொழும்புத் தலைமையகத்திலிருந்து பதில் கூடக் கிடைப்பதில்லையாம்.

1983 ஜூலை கலவரத்தின்போது எரிந்த கடைகளுக்கு காப்புறுதி வழங்கப்பட்டிருந்தது.

அப்போது எரிந்த கடைகள் வீட்டடங்கள் ஆகியவற்றிற்காக நஷ்டஈடாக மொத்தம் 65 கோடி ரூபா காப்புறுதிப் பணம் வழங்கப்பட்டது.

அதற்குப் பின்னர் இன்றுவரை கடந்த மூன்று வருடங்களில் வீடு தீ நஷ்டஈடும் கொடுக்கப்படவில்லை

இவ்வாறு காப்புறுதி கட்டுத்தாபன வட்டாரங்களில் இருந்து அறிய வந்தது. (2-5)

வாகனப் பாஸ்முறை: நீக்கக் கோரிக்கை

கிளிநொச்சி, ஆக. 8

கிளிநொச்சி, ஆனையிறவு இராணுவ முகாம்களுடாகச் செல்லும் சகல வாகனங்களும் நடைமுறையிலுள்ள வாகன அனுமதி பாஸ் முறையை கட்டாயமாக்கி அமுல் செய்யவேண்டும்.

இவ்வாறு கோரும் அவசர தந்தி ஒன்றை கிளிநொச்சி பிரதேசக் குழு ஜனாதிபதி, தேசிய பாதுகாப்பு அமைச்சர், போக்குவரத்து அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி உள்ளது. (இ-76)

வவுனியாவில் மீண்டும் "முகமூடிகள்" தொல்லை

யாழ்ப்பாணம், ஆக 8

வவுனியாவில் மீண்டும் முகமூடிக்காரர்களின் தலையாட்டல் தொல்லைகள் தொடங்கியுள்ளன.

வவுனியாவில் தற்போது அதிகரித்துள்ள சோதனை சேவையினால் எரிபொருள் கடத்தல் சிப்பாய்களினால் கைதுசெய்யப்படுவதுடன் பலத்த தாக்குதலுக்கும் இலக்காகின்றனர்.

சிப்பாய்களுடன் வரும் முகமூடிக்காரர்களை கைது செய்யும் இளைஞர்களைப் பார்த்து தலையாட்டுவதாக எரிபொருள் கடத்தல்காரர்கள் கூறப்படுகிறது.

இதனால் வவுனியாவில் கடந்த வாரத்தில் மட்டும் நூற்றுக்குமேற்பட்ட இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

இவர்களில் பெரும்பாலானவர்கள் ஆனைவிழுந்தான் பகுதியைச் சேர்ந்தவர்களாம். (இ-10)

திருமுறைமன்ற வகுப்புகள் ஒத்திவைப்பு

நல்லூர், ஆக 8

அகில இலங்கை திருமுறைமன்ற வகுப்புக்கள் யாவும் ஒத்திவைக்கப்பட்டுள்ளன

நவம்பர் கந்தன் உற்சவத்தை முன்னிட்டும் மாணவர்களுக்கு விடுமுறை வழங்கும் நோக்கமாகவும் செப்டம்பர் மாத இறுதியுடன் இவ்வகுப்புக்கள் நடைபெறமாட்டாது என்று மேற்படி மன்ற அமைப்பாளர் திரு. எம். கிருஷ்ணமூர்த்தி தெரிவித்தார் (உ)

மூக்குக் கண்ணாடி அன்பளிப்பு

பருத்தித்துறை, ஆக 8

கஷ்ட நிலையில் உள்ள கந்தர்மடம் தமிழ் வித்தியாசாலை மாணவி ஒருவருக்கு பருத்தித்துறை இராமகிருஷ்ண சாரதா சேவாச் சிரமத் தலைவர் சுவாமி சிற்பரானந்தா இலவசமாக மூக்குக் கண்ணாடியை அன்பளிப்புச் செய்தார். (ஒ-118)

செய்திக்கொத்து

நூல்வெளியிடு

யாழ்ப்பாணம், ஆக 8

இளைப்பாறிய புகையிரத நிலைய அதிபர் திரு. மு. தியாகராஜா ஆக்கிய, கந்தபுராண நாடகம் ஆன கந்தநிதி முருகன் பிள்ளைத் தமிழ் என்ற நூல் நாளை 9 ஆம் திகதி சனிக்கிழமை நல்லூர் ஆதீனத்தில் வெளியிடப்படும்

யாழ் பல்கலைக்கழக பதிவாளர் திரு. வே. நாகலிங்கம் தலைமையில் நடக்கும் இவ்விழாவில் நூல் வெளியீட்டுரையை பேராசிரியர் அ. சண்முகதாஸும் அறிமுகவுரையை திருமதி வசந்தா வைத்தியநாதனும் ஆய்வுரையை திருமதி உமா மகேஸ்வரனும் நிகழ்த்துவார்கள் (ஒ)

கருத்தரங்கு

பருத்தித்துறை, ஆக. 8

செம்பியன் பற்று நெல்லியான் பகுதியில் இம்மாதம் 11ஆம் திகதி திங்கள் கிழமை தெங்கு அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கும் பயிற்சி வகுப்பும் நடைபெறும்.

நெல்லியான் கிராம அபிவிருத்திச் சபையின் பணிமனையில் நடைபெறும் என தெங்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. வி. கணேசலிங்கம் தெரிவித்தார் (இ-ஒ, 118)

நினைவுக்கூட்டம்

பருத்தித்துறை, ஆக. 8

வடபருதி இடதுசாரி இயக்கத்தின் தர்மகுல சிங்கம் (ஜெயம்) நினைவு தினமும் 30 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.

இந்த நினைவு தினக் கூட்டம் தோழர் சி. மாசிலாமணி தலைமையில் வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். (ஒ-118)

ஊக்குவிப்பு பரிசு

யாழ்ப்பாணம், ஆக 8

வடமாநிலத்தில் நடைபெறும் ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிட்சையில் முதல் இடத்தைப் பெறும் மாணவர்களுக்கு ஊக்குவிப்புப் பரிசு வழங்கப்படும்.

இதனை காரைநகர் வாரிவளவு நல்லிணக்க சபையின் கல்வி ஊக்குவிப்பு சபை வழங்க முடிவு செய்துள்ளது (இ-ஒ)

சங்கானையில் தராசு படிகளுக்கு முத்திரை

யாழ்ப்பாணம், ஆக 8

கடந்த திங்கட்கிழமை முதல் இம்மாதம் 18 ஆம் திகதி வரை சங்கானை உதவி அரச அதிபர் பணிமனையில் தராசுகளுக்கு முத்திரையிடப்படும்

இவ்வாறு உதவி உள்நாட்டு வர்த்தக ஆணையாளர் தெரிவித்துள்ளார். (ஒ)

சாவகச்சேரியில் சைக்கிள் திருட்டு

கிளிநொச்சி, ஆக 8

சாவகச்சேரிப் பகுதியில் சைக்கிள் களவு அதிகரித்து வருகின்றது

ஒரு வார காலத்தில் மட்டும் எட்டுச் சைக்கிள்கள் சாவகச்சேரி சந்தைப் பகுதியிலிருந்து திருடப்பட்டுள்ளன (ஒ-76)

சங்கத்தலைவருக்கு கௌரவம்

வேலணை, ஆக 8

வேலணைப் பொருள் கூட்டுறவுச் சங்க வளர்ச்சியில் அயராது பாடுபட்ட சங்கத் தலைவர் திரு செ. அரசரத்தினம் கௌரவிக்கப்பட்டார்.

வேலணை தெற்கு பனை பொருள் கூட்டுறவுச்சங்க மண்டபத்தில் நேற்றுநீர் விருந்துபசாரம் ஒன்று இவருக்கு அளிக்கப்பட்டது.

நேற்று விருந்தை வேலணை தெற்கு பனை பொருள் கூட்டுறவுச் சங்கம் ஏற்பாடு செய்தது (ஒ)

கூட்டுறவுப் பயிற்சியாளர் பிரச்சினை

கிளிநொச்சி, ஆக. 8

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு ஆகிய பகுதிகளில் கூட்டுறவுப் பயிற்சிகான விரிவுரைகள் நடத்தினர்.

இவ்வாறு கூட்டுறவுப் பயிற்சிக்கு எதிர்க்கு வருமாறு கோரப்பட்டவர்கள் மேலிடத்திற்கு மகஜர் அனுப்பியுள்ளனர்

கண்டு பொல்கொல்ல கூட்டுறவுக் கலாசாலையில் செப்டம்பர் 2 ஆம் திகதி இந்த விரிவுரைகள் ஆரம்பிக்கவுள்ளன. (ஒ-76)

கோழி வளர்ப்பு பற்றி விரிவுரை

வட்டுக்கோட்டை, ஆக. 8

வட்டுக்கோட்டை, சித்தன்கேணி, நெல்லியான், மயிலிபற்புலம், பெரிய புலம், மாதகல் ஆகிய இடங்களிலுள்ள 'கல்விவட்ட' மாணவர்களுக்கு 'கோழிவளர்ப்பு' என்னும் விடயம் பற்றி 'போருட்' விநாயகம் விரிவுரைகளை நடத்தி வருகின்றது

சித்தன்கேணி, கணேச வித்தியாலயத்தில் சனிக்கிழமைகள் தோறும் நடத்தப்பட்டு வரும் இந்த விரிவுரைகளை வட்டுக்கோட்டை நலன்புரிச் சங்கத் தலைவரும் பளை ஆசிரிய கலாசாலை முன்னாள் விரிவுரையாளருமான திரு. அ. அரியரத்தினம் நிகழ்த்தி வருகின்றார். (உ-161)

போக்குவரத்து ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஆக. 8

நயினை நாகபூஷணி அம்மன் ஆலய வருடாந்த உற்சவங்கள் ஆரம்பமாகியிட்டு வழமை போல் விசேட போக்குவரத்து சேவைகள், ஒழுங்கு படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு கோயில் அறங்காவலர் சபைத்தலைவரும் யாழ் உதவி அரசாங்க அதிபருமான த. குலசேகரம் தெரிவித்தார்

எதிர் வரும் 18 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், 19 ஆம் திகதி தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

அடியார்கள் உட்பட சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் இவ்வருட உற்சவம் தடையின்றி இனிதே நடக்க ஒத்துழைக்க வேண்டும் என்றும் அறங்காவலர் சபையின் சார்பில் அவர் கேட்டுக் கொண்டார். (உ-5)

யாழ் நகர மக்களுக்கு!

அரிய சந்தர்ப்பம்!!

உதயனின் உதய சேவை

விநியோகம் இலவசம்!!!

அதிகாலையில் கடைக்குப் போய் பத்திரிகை வாங்க நேரத்தைச் செலவிடாதீர்!

உதயனின் உதய சேவையில் பதிவு செய்து வீட்டில் இருந்தவாறே உதயன், சஞ்சிகை படிக்கலாம். உடன் சந்தாதாரராகுங்கள்!

யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு அதிகாலையில் வீடுவீடாகப் பத்திரிகைகளை விநியோகிக்கும் இவ்வசேவையை நாம் ஆரம்பித்துவிட்டோம்.

நீங்களும் சந்தாதாரராகிப் பதிவு செய்தால் மின் சிரமமின்றி உதயனையும் சஞ்சிகையையும் வீட்டில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு கொள்ளுங்கள்!

விநியோகப் பகுதி,
'உதயன்',
த. பெ. எண்: 23.
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதய சங்கற்பம்

பொறாமை அறிவினால் எவ்வித பிரயோசனமும் இல்லை. இதயத்திலிருந்து உணர்ச்சி எழுதல் வேண்டும். அறிவு சிறிதளவு தூரம் செல்லும். இதயவுணர்ச்சி இறைவனருகே வரையும் செல்லும்.
— சுவாமி விவேகானந்தர்

உதயன்
இலங்கை – திருநாமம் – ஒரு தினமும்
இல 15 2வது ஒழுங்கை தொலைபேசி 24805
பின்னாற் நிலை லிமி 22073
யாழ்ப்பாணம். 08-08-86 த பெ 23

காலத்துக்கு உதவாத காப்புறுதி வேண்டாம்

கடந்த மூன்று வருடங்களாக, யாழ்ப்பாணத்தில் நடந்த அழிவுகளுக்கு காப்புறுதி நஷ்ட ஈடு எதுவும் வழங்கப்படவில்லை.

1983 ஜூலையில் நடந்த அழிவுகளுக்குத் தான் ஆங்கே கடையாக காப்புறுதி, நஷ்ட ஈடு இங்கு வழங்கப்பட்டது.

அதன் பின்னர் யாழ்ப்பாணப் பகுதியில் நடந்த அழிவுகள் ஏராளம். காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நஷ்ட ஈட்டுத் திட்டத்தில் பணம் செலுத்தியவர்கள் பலரும் அசம்பாவிதங்களின் போது பாதிக்கப்பட்டனர். அவர்களின் உடைமைகள் சேதமாகின; அல்லது முற்றாக அழிந்தன.

எனினும் அவர்களின் நஷ்ட ஈட்டு விண்ணப்பங்களுக்கு எவ்வித பதிலாவது கிடைக்கவில்லையாம்.

இது கண்டனத்துக்கும் கவலைக்கும் உரியதாகும். விண்ணப்பம் ஏற்கப்படவில்லை என்பது குறித்து காப்புறுதிதாரருக்கு கடிதம் தானும் எழுதாமல் மாற்றுந்தாய் மனப்பான்மையுடன் இருப்பது விசனத்துக்கு உரியது. விண்ணப்பத்தை ஏன் ஏற்கவில்லை, காரணங்கள் என்ன என்பதை விளக்கி ஒரு கடிதம் எழுத வேண்டியது கூட்டுத்தாபனத்தின் கடமை.

தீவினால் மற்றும் எதிர்பாராத ஆபத்து அல்லது விபத்துச் சம்பவங்களினால் ஏற்படும் நஷ்டங்களுக்குத்தான் பலர் காப்புறுதிப் பணம் செலுத்தினார்கள்.

வன்செயல், கலவரம் ஆகியவற்றால் ஏற்படும் சேதங்களுக்கு நஷ்டஈடு பெறுவதற்கெனக் காப்புறுதி செய்தவர்களுக்கே அதற்கான நஷ்டஈடு வழங்கப்படும். இவ்வாறு கூட்டுத்தாபனம் முன்னர் ஒரு தடவை அறிவித்திருந்தது.

கலவரகால பாதிப்புக்குரிய காப்புறுதித் திட்டம் இடையில் வந்தது என்று வாடிக்கையாளர் பலர் முறைப்பட்டனர். இது அனுபவிக்கு வருவதற்கு முன் காப்புறுதிதாரராகச் சேர்ந்தவர்களுக்காவது இப்போதைய சேதங்கள், அழிவுகளுக்கு நஷ்டஈடு வழங்கலாம். அது தான் நியாயம். ஆனால் அத்தகைய அணுகுமுறை எதுவும் இல்லாமல் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் நடந்துகொள்வது லாபநோக்கமே அற்ற செயலாகும். காப்புறுதிதாரரின் நம்பிக்கையை வீணடித்த செயலுமாகும்.

கலவரகால காப்புறுதித் திட்டம் இடையில் வருவதற்கு முன்னர் சேர்ந்த காப்புறுதிதாரரின் விபத்துக் காப்புறுதியை கலவரகாலக் காப்புறுதியாக மாற்றுவதற்கு வகை செய்திருக்கலாம். அதற்காக குறுகிய காலத்திற்கு அறவிட்கூடிய மேலதிக நிதிக் கொடுப்பனவுகளைப் பெற்று அந்த மாற்றத்தைச் செய்திருக்கலாம்.

எந்தவித மாற்றுத்திட்டம் பற்றியும் ஆலோசிக்காமல் யாழ்ப்பாணக் காப்புறுதிக்காரரை நோகச் செய்வது நல்லதல்ல. காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தில் அவர்கள் வைத்துள்ள நம்பிக்கையை அது குறைத்து விடும். அவர்களை நட்டாற்றில் கைவிட்டதற்கு ஒப்பாகும்.

இனியாவது மாற்றுவழி ஒன்றை கூட்டுத்தாபனம் முன் வைக்கவேண்டும். அதுவும் செம்மாவிடில் யாழ்ப்பாண மக்கள் முற்று முழுதாக அரசாங்கக் காப்புறுதியைப் பிரயோகிக்கும் நிலை உருவாகும். அது தவிர்க்க முடியாததும் ஆகிவிடும்.

சமுதாய நலன் கருதி சேவையாற்ற வேண்டும்

பிரிவுபசார விழாவில் உரை

பண்டத்தரிப்பு, ஆக 8

நாம் என்றும் சமுதாய நலன் கருதி சேவையாற்ற வேண்டும் அரசாங்க ஊழியர்கள் ஒவ்வொருவரும் தம்மால் இயன்ற அளவு சேவை செய்ய வேண்டும் அரச சேவை மக்கள் சேவை.

வலி-தென் மேற்கு உதவிஅரசாங்க அதிபராக கடந்த நான்கு ஆண்டுகள் சேவையாற்றிய திரு கே. சண்முகநாதன் தமக்கு அளிக்கப்பட்ட பிரிவுபசார விழாவிற்கு பதிலுரை வழங்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

உதவி அரசாங்க அதிபர் பிரிவு அரச ஊழியர் நலன்புரிச்சங்கம் நடத்திய பிரிவுபசார விழாவுக்கு நிருவாக அதிகாரியான திரு. எம். ஞானசேகரம் தலைமை வகித்தார்

காணி அதிகாரி திரு. வடிவேலு, விதிதர்களான திரு. கந்தையா, திரு. சுகுணபாலன் ஆகிய மூவருக்கும் இதேதினம் ஓரே மேடையில் பிரிவுபசார விழா நடத்தப்பட்டது

திரு சண்முகநாதன் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:—

பொதுச் சேவையில் நான் மூன்று கொள்கைகளை கடைப்பிடித்துவந்தேன் ஒன்று—அவசியம் இன்றி லீவு எடுக்காதது.

இரண்டு— அலுவலக வேலைகளை வீட்டுக்கு எடுத்துச் செல்லாதது.

மூன்று—அனைவரிடமும் அன்பு கொள்ளுதல்.

இப்படி அவர் கூறினார்.

சமூகசேவை அலுவலர் திரு எஸ். சிவபாதசுந்தரம் திரு. ரி. நேசராசா, திரு. எஸ் நடராசா, புதிய உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தினி கப்பிரமணியம் ஆகியோரும் ஓய்வு பெற்றுச் செல்லும் திரு. வடிவேலு, திரு கந்தையா, மாற்றலாகிச் செல்லும் சுகுணபாலன் ஆகியோரும் உரையாற்றினர்.

(இ - 180)

இந்தியப் பகுதியில் சீனாவின் ஹெலிக்கொப்டர் தளம்

பாரதம் குற்றம் சாட்டுகிறது

புதுடில்லி, ஆக 7

இந்தியாவின் ஆளுகைக்குட்பட்ட அருணாசல் பிரதேசத்தில் சீனர்கள் ஹெலிக்கொப்டர் இறங்குதளம் ஒன்றைக் கட்டியெழுப்பி வருகிறார்கள்

வெளியுறவு இணை அமைச்சர் கே ஆர். நாராயணன் நேற்று இந்திய நாடாளுமன்றத்தில் இப்படிக் குற்றச்சாட்டுத் தெரிவித்தார்

சீனாவின் இந்த நவடிக்கையால் சீன-இந்திய எல்லையில் பதற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது

இந்த விடயம் குறித்து இணை அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

அருணாச்சலப்பிரதேசத்தில் கலிகாராம் பள்ளத்தாக்கில்சீனர்களால் இத்தளம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே சில ஹெலிக்கொப்டர்கள் அங்கு இறங்கியும் அங்கிருந்து புறப்பட்டும் சென்றிருப்பதும் அவதானிக்கப்பட்டுள்ளது

சமீபத்தில் சீனாவில் நடைபெற்ற இந்திய உயர்மட்ட அதிகாரிகளின் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இத்தளம் அமைக்கப்பட்டு வருகின்றது. பேச்சுவார்த்தைகளில் பங்குபற்றிய சீன அதிகாரிகள் அருணாசல பிரதேசத்தில் ஊடுருவல் பற்றியசெய்திகளை மறுத்திருந்தனர்.

சீனர்களது அத்துமீறல்களுக்கு இந்தியா உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தயாராகி வருகின்றது ஆனால் கரியல் காரணங்களுக்காக நாடாளுமன்றத்தில் இதுபற்றி தகவல் கூறிச் சமர்ப்பிக்க முடியாமல் உள்ளது.

— இவ்வாறு அமைச்சர் நாராயணன் மேலும் தெரிவித்தார். (உ-ஒ)

அணு ஆயுதக் குறைப்பு

வல்லரசுகள் மட்டும் சம்பந்தப்பட்ட பிரச்சினை அல்ல

7 நாட்டுத்தலைவர்கள் கருத்து

மெக்ஸிக்கோ, ஆக.7

இன்றைய உலகில் ஆயுதப்போட்டியால் நாகரீகத்துக்கே அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. அணு ஆயுதக் குறைப்பு இனி வல்லரசுகள் மட்டுமே சம்பந்தப்பட்ட ஒரு பிரச்சினை அல்ல

இவ்வாறு மெக்ஸிக்கோவில் நடைபெறும் அணு ஆயுத குறைப்பு உச்சி மாநாட்டில்கருத்து வெளியிடப்பட்டது

இந்திய பிரதமர் ராஜீவ் காந்தி, மெக்ஸிக்கோ ஜனாதிபதி மிகெயில் டினா மாநாடு, ஆஜென்டீனா ஜனாதிபதி அல்பான்ஸ் கிங் கிரேகப் பிரதமர்பப்பாந்ரியோ, சுவீடன் பிரதமர் கான்ஸன், தன்சானியா ஜனாதிபதி நிரேரே ஆகியோர் இந்த உச்சி மாநாட்டில் கலந்து கொண்டவர்

பெரும் அளவிற்குக் குவிந்து வைத்துள்ள அணு ஆயுதங்கள் உலக அழிவிற்கான ஒரு கருவியாகவே அமைந்துள்ளது.

அணு ஆயுதங்களை உற்பத்தி செய்வதை தவிர்ப்பதன் மூலம் ஒரு வருடத்துக்கும் அதிகமான கடன் பளுவை வரும் நாடுகளில் நீக்கி விட முடியும்

மக்களின் வாழும் உரிமையே சகலரும் பாதுகாக்க வேண்டும்.

—இவ்வாறு அந்த மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. (உ-ஒ)

ரேகனைச் சாடுகிறார் அவரது அமைச்சர்

வாஷிங்டன், ஆக 7

அமெரிக்க ஜனாதிபதி றேகனால் அங்கீகாரமளிக்கப்பட்ட மாவிய அடிப்படையிலோதுமை விற்பனைக் திட்டத்தை அமெரிக்க என்நாட்டு அமைச்சர் ஜேர்ஜ் சூல்ட்ஸ் கண்டித்துள்ளார்.

அமெரிக்கா கொள்கைகளில் ரஷ்யாவுக்கு எதிரானது. மாவிய முறையில் தானியங்கள் வழங்குவது சிநேகித நாடு ஒன்றுக்குப் பொருந்தும் ஆனால் எதிர் நாட்டிற்கு வழங்கும் மாவிய உதவி அமெரிக்காவின் பாதுகாப்புக்கு உகந்ததாக இல்லை.

இவ்வாறு ஜோர்ஜ் சூல்ட்ஸ் கருத்து வெளியிட்டார்.

அமெரிக்க ஜனாதிபதியொருவரது கருத்துக்கு எதிராக அவரது அமைச்சரவையில் உள்ளவர்கள் எவருமே கருத்துக்கள் தெரிவிப்பதில்லை.

(உ-ஒ)

அமைச்சரவை அமைப்பதில் முயற்சி

பாங்கொக், ஆக. 7

புதிய அமைச்சரவை அமைப்பதில் தாய்லாந்தின் முன்னாள் பிரதமர் பிரேம் டின்சுலானந்தா ஈடுபட்டுள்ளார்.

அரசியல் கட்சிகளின் தலையீடு எதுவுமின்றி தனது அமைச்சர்களைத் தெரிவு செய்வதற்காக அவர், இராணுவத்தலைவர் ஒன்றுக்கு அருகில் உள்ள அதிகாரிகள் அருணாசல பிரதேசத்தில் ஊடுருவல் பற்றியசெய்திகளை மறுத்திருந்தனர்.

இங்கு வந்து செய்யட்டுமே?

ஹிரோஷிமாவில் 41 ஆண்டுகளுக்கு முன் முதலாவது அணுகுண்டுக்குப் பலியானவர்களின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய ஹிரோஷிமா மேயர் ரஷ்யாவும் அமெரிக்காவும் தமது அணு ஆயுத பரிசோதனையை இங்கு வந்து மேற்கொண்டால் மட்டுமே அவர்களுக்கு அதனால் ஏற்படும் அழிவு புலப்படும் என்றார்.

விடுவிக்குமாறு உத்தரவு

இந்திய சிறைச்சாலைகளில் உள்ள மனவளர்ச்சி குன்றிய அதாவது உடல் ஊனமுற்றவர்களையும் குழந்தைகளையும் எவ்வித நிபந்தனையுமின்றி உடனடியாக விடுவிக்குமாறு உயர்நீதிமன்றம் சில மாநிலங்களுக்கும் ஆணை பிறப்பித்துள்ளது

ரஷ்யா அறிவிப்பு

ஆப்கானிஸ்தானிலிருந்து ரஷ்ய துருப்புக்கள் பூரணமாக வெளியேறுவது பாகிஸ்தான் வெவியுறவுக் கொள்கைகளினையே தங்கியுள்ளதாக ரஷ்யா அறிவித்தது.

ராஜினாமா

கேரளசட்ட சபையின் உறுப்பினர் குழு திருத்தி அமைக்கப்பட்டதாக ஏற்பட்ட சர்ச்சையால் உபசபாநாயகர் கேஸ்சா குஞ்சு தனது பதவியை ராஜினாமா செய்துள்ளார்

தனது வாக்குமூலத்துக்கு சனிக்கிழமை சென்றார் கூட்டணி அரசாங்கம் ஒன்று முன்னாள் பிரதமரின் தலைமையில் அமைக்கப்பட இருக்கின்றது.

(உ-ர)

கிளர்ச்சியாளர் பலர் கைது

பஞ்சாப்பில் பாகிஸ்தானியர் பயிற்சியளித்த கிளர்ச்சியாளர் பலரை பொலீஸார் கைது செய்த பொழுது அவர்களிடமிருந்து பெருந்தொகையான அமெரிக்க ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டன.

தென்னாபிரிக்கா குறித்து இஸ்ரவேல்

தென் ஆபிரிக்காவிற்கும் இஸ்ரவேலுக்கும் இடையிலான தொடர்புகள் இருப்பது குறித்து உலகில் பரவலாகக் கண்டனம் தெரிவிக்கின்றபோதிலும் தென் ஆபிரிக்க இன ஒதுக்கலை மாற்றும் சக்தி இஸ்ரவேலிடம் இல்லை என பிரதமர் ஷிமோன் பெரஸ் தெரிவித்தார்

சிறுவனின் செயல்

77 வயது மாது ஒருவர்மீது பலாத்காரம் புரிய முயன்றதாக 8 வயது சிறுவன் ஒருவனை லண்டன் பொலீஸார் தேடிவருகின்றனர்.

தானத்திற்கு தண்டனை குறைப்பு

இறந்தபின்பு தமது உடல்உறுப்புகளை வைத்தியப்பகுதிக்கு தானம் செய்யமுன்வரும்இந்தோனேஷிய சிறைக்கைதிகளுக்கு தண்டனையைக் குறைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது. (ஒ)

மனம் தூய்மை பெற தெய்வீக நிலை கிட்டும்

ஒரு மனிதன் ஆகங்காரத்தை ஒழிப்பானாகில் அவனுக்கு சுவர்க்கம் கிடைப்பது நிச்சயம். இந்த உலகத்திலேயே மனிதன் சுவர்க்கத்தை அடையலாம். கேவலம் மனிதன் எங்கேயோ சுவர்க்கத்தை நாடுகிறான். இயற்கையாக மனிதன் தெய்வத்தன்மை படைத்தவன் என்பதை உணர்கின்றானில்லை.

மனிதன் கடவுளை செய்யலாம் எனினும் மனிதனை அடக்குவது அசாத்தியம்.

பகவத்கீதையில் மனத்தின் அமைதியற்றநிலை குறிப்பிடப்படுகிறது. தூய்மையான மனத்தின் கண் ஆசை கிடையாது; தெய்வீகம் திகழும். மனிதனால் ஒருவனை அடிமைப்படுத்த வேறு சுதந்திரம் உள்ளவனாலோ காரணமாயுள்ளது

ஒரு விநாடிதானும் மனம் ஓரிடத்தில் இருக்காது. அப்படியானால் மனிதனை எங்ஙனம் அடக்குவது? ஆசைகள் அடங்கிய மனம், ஆசையை விட்டு இருக்குமானால் மனம் சாந்தமாக இருக்கும்.

ஒரு சக்தன் மனதிலிருந்து ஆசையை நீக்கி வாழ முற்பட வேண்டும் மனிதனுடைய மனதை 'ஈ'க்கு ஒப்பிடலாம். ஈ நெய்வேத்தியத்தில் உட்காரும், மறுபிறாகு அழுக்கில் உட்காரும். அதே விதம் மனமானது பவித்திரமான எண்ணங்களை எண்ணும். மறுகணம் பயங்கரமான தேய்மாறான எண்ணங்களை எண்ணும், மனதை மதம் பிடித்த யானைக்கும் ஒப்பிடலாம். மதம் பிடித்த யானையை பாகன் குவிப்பாட்டிய பிறகும் தனது உடலில் மண்ணை வாரி இறைக்கும். அதே விதம் மனமும் ஆழக்க வாசனையால் தீய எண்ணங்களையே எண்ணும்.

மனதினை அடக்குவது முக்கியம். ஒரு ஆற்றிலிருந்து அணைக் மூலம் அவ் ஆற்றின் நீரை திசை திருப்பி கால்வாய்களால் பயிர்களை பாய்ச்சுகின்றார்கள். அட்டியபோல் மனதை வெளியே போகாதபடி கட்டுப்பாடு செய்ய போர்று ஆத்மீக சக்தி வெளியே போகாதபடி கட்டுப்பாடு செய்ய வேண்டும்.

மனதினை கடவுளிடம் செலுத்தினால் கட்டுப்படுத்தலாம். இறைவனின் நாமமாகிய மலரி போன்ற திருவடிகளை மனமானது அடைந்தால் மனதை எங்ஙனம் அடக்குவது? ஆசைகள் அடங்கிய மனம், ஆசையை விட்டு இருக்குமானால் மனம் சாந்தமாக இருக்கும்.



பகவான் சத்யசாயிபாபா

ஞானக்கதிர்

ஒருவனுடைய மனதை அடைவது இயற்கையாக சுபாவம். மனிதன் இப்பூவுலகிற்கு தெய்வத் தன்மையை வெளிப்படுத்தவே பிறந்திருக்கிறான். வேதங்கள் இப்படித்தான் பறைசாற்றுகின்றன.

மனிதன் தனது சுயரூபத்தை இழப்பதற்கு மூலகாரணம் மோகம் அல்லது ஆசை. அதற்குக் காரணம் மனம். மோகத்திலும் ராகம், ராகத்திலும் துரோகம், துரோகத்திலும் அறியாமை அதிலே அஞ்ஞானம். இவற்றைத் தொடர்ந்து துன்பதுயரம், கர்மம், ஜன்மம், துக்கம் இவை சங்கிலி போல் மனிதனைப் பிணைக்கிறது.

பிறவி தோறும் தொடர்ந்து வருகிறது. பல நாமங்களையுடைய அர்ஜுனன் இறுதியில் மோகத்திலும் அகலுறாமுன். மோகம் ஒரு மனிதனை தன் பிடிக்குள் நன்றாகச் சிக்கவைத்துவிடும் ஒருவன் மனதை நிட்டை படுத்தி ஒரு காரியம் செய்யாது. அப்படியானால் மனதை எங்ஙனம் அடக்குவது? ஆசைகள் அடங்கிய மனம், ஆசையை விட்டு இருக்குமானால் மனம் சாந்தமாக இருக்கும்.

மனதை கடவுளிடம் செலுத்தினால் கட்டுப்படுத்தலாம். இறைவனின் நாமமாகிய மலரி போன்ற திருவடிகளை மனமானது அடைந்துவிட்டால் மனம் வெளியேவர முடியாது. இறைவன் திருவடியை அடையாவிட்டால் அது அதிகம் இன்பம் அடையும் அதைக் கட்டுப்படுத்த முடியாது. (உ-ஒ)

ஆலய செய்திகளில்

திருவிளக்குப் பூசை

யாழ்ப்பாணம், ஆக.8

நவாலி அட்டகிரி கந்தசுவாமி தேவஸ்தானத்தின் திருவிளக்குப் பூசை ஆடிப்பூர தினமான இன்று வெள்ளிக்கிழமை மாலை நடைபெறும்

(உ-ஒ)

வருடாந்த உற்சவம்

சாவகச்சேரி ஆ 8

எழுமட்டுவாள் மருதங்குளம் விநாயகர் ஆலய வருடாந்த உற்சவங்கள் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையன்று ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்களுக்கு நடைபெறும்.

சிவஸ்ரீ உ. பரமானந்த தக்ஷகுருக்கள் விமரிசையாக விநாயகர் விழாவினை நடத்தி வைப்பார். (உ-51)

ஆலயங்களில்

குறள்:

ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

பொருள்:

தவவலிமை உடையவரின் வலிமைப் பசியைப் பொறுத்துக் கொள்ளலாகும்; அதுவும் அப்பசியை உணவு கொடுத்து மாற்றுகின்றவரின் ஆற்றலுக்குப் பிற்பட்டதாகும்.

அரியாலை சித்திவிநாயகர் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், ஆக 8

அரியாலை நீர்நொச்சித் தமிழ் அருள்மிகு ஸ்ரீசித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவங்கள் நாளை சனிக்கிழமை காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன

18 ஆம் திகதி திங்கட்கிழமை தேரும் 19 ஆம் திகதி தீர்த்தமும் இடம்பெறும். (ஒ)

கொடிச்சீலை ஊர்வலம்

யாழ்ப்பாணம், ஆக. 8

நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் கொடியேற்ற வைபவத்திற் பாவிக்கப்படும் கொடிச்சீலை நாளை சனிக்கிழமை காலை 8 மணியளவில் சட்டநாதர் வீதியில் உள்ள ஸ்ரீமுருகன் ஆலயத்தில் இருந்து அழகிய சித்திரத்தேரில் செங்குந்த மரபினராக நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்படும் (எ)

வீரமாபிடாரி தீர்த்தம்

யாழ்ப்பாணம். ஆக.8

வண். வடமேற்கு (கொக்குவில் மேற்கு) ஸ்ரீ வீரமாபிடாரி அம்மன் ஆலயத்தில் ஆடிப் பூரதினமாகிய இன்று வெள்ளிக்கிழமை மாலை தீர்த்தத் திருவிழாவும் மாலை 6.00 மணிக்கு திரு விளக்குப் பூசை (சமுக்கலி பூசை)யும் நடைபெறும்.

நாளை மாலை பூங்காவனத்துடன் அலங்கார உற்சவங்கள் பூர்த்தி யடையும். (ஒ)

மின் இணைப்பு துண்டிப்பு ஒரு விளக்கம்

வாசகர் திருமுகம் பகுதியில் ஜூலை 22 ஆம் திகதி வெளியிடப்பட்ட கடிதம் முற்றிலும் தவறானவை எனநாம் மறுக்கிறோம்.

தமது பகுதியிலுள்ள சட்டவிரோத மின் இணைப்பை முதலில் துண்டிக்கட்டும் பின்னர் ஏனையோர்கள் தாமாகவே திருந்துவார்கள் என குறிப்பிடப்பட்டிருந்தது பொருத்தமற்ற கூற்றாகும்.

சட்டவிரோத மின் இணைப்பைத் துண்டிக்கச் சென்றவர்கள் ஒருவகுதியை மட்டும் சாந்திருந்தார்களில்லை. இவர்களிடம் உள்ள அனைத்து பிரசைகள் குழு, நூல் நிலையக் குழு, பிரதிநிதிகளும் பரந்துபட்டு ஆதரவு வழங்கினார்கள்.

எம்மிடம் கிராம வேறுபாடு இருக்கவில்லை என்பது சகலருக்கும் தெரிந்தது மறுக்க முடியாத உண்மை.

மின்பாவனையாளர் சங்கம் தனது முதல் நடவடிக்கையாக சட்டவிரோத மின்னிணைப்பைத் துண்டிக்குமாறு துண்டுப் பிரசுரம் மூலம் சகலரையும் கோரியது

பின்னர் ஒலிபெருக்கி மூலமும் சகல பகுதிகளும் தெருத் தெருவாக வேண்டுகோள் விடப்பட்டது.

சட்டவிரோத மின் இணைப்பை துண்டிக்கும் பொழுது மின்வயர்களை தவிர்த்து மின்கம்பி களையே முதலில் துண்டித்தோம்.

நாம் தாக்கப்பட்டதன் எதிரொலியாக மின்பில் கடத்தப்பட்டது, சாரதி தாக்கப்பட்டார். இவற்றை மின் பாவனையாளர் சங்கம் கறுப்பினர்செய்யவில்லை.

பொதுமக்கள் சிலரே செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

சாரதி பத்து நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கியிருந்தார் என விளக்க விரும்பி தெரிவித்திருப்பது தவறானதாகும்.

இச்சாரதி தாக்கப்பட்ட மூன்றாவது நாளே தமது கடமையில் ஈடுபட்டிருந்தார் என்பதே உண்மை.

தாக்குண்ட பல் சாரதிக்கு அனுதாபம் தெரிவிக்கும் முகமாக பல்லாண்டு சேவை நிறைந்தும் செய்தன என விளக்க விரும்பி சொல்லியிருப்பது முழுக்க முழுக்கத் தவறு

இது தொடர்பான சகல விளக்கங்களையும் வாசகர்கள் எந்த நேரத்திலும் எம்மால் ஆதாரங்களுடன் கொடுக்க முடியும்

ஜெ. ஏ. ரவிந்திரன்
செயலாளர்

பொருளாதார, வணிகவாசகர் சங்கம்
இளவாலை

Bitsman Institutes
Manipay
A/L 87,88 Aug. புதிய பிரிவு
கலை, வர்த்தக, விஞ்ஞான
வகுப்புக்கள்
ஆரம்பம்: 8 8 1986 வெள்ளி 8 00 a m.
4ஆவது பிரிவு O/L DAY CLASSES
ஆரம்பம்: 6-8-86 புதன் 8.00 a.m.

உதயன்

08-08-1986 வெள்ளிக்கிழமை

Bitsman Institutes
Manipay
A/L பௌதீகம்
87 Aug. பொறியியலும் நீர் நிலையியலும்
88 Aug. ஒளியியல்
ஆசிரியர்:
திரு. சௌந்தி
B.Sc. (Hons)
ஆரம்பம்: 8 8 1986 வெள்ளி 7.00 a m.

ரயில்வே சொத்துக்களை திருடவேண்டாம் என்று ரயில்வே அதிபர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், ஆக 8
யாழ் குடாநாட்டில் உள்ள ரயில்வே சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கவேண்டாம் என்றும் அவற்றைக் களவாட வேண்டாம் என்றும் யாழ் பிரதம ரயில்வே அதிபர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ரயில் நிலையம், பொதுமக்கள் சொந்தம் ஆகவே பொதுமக்கள் ரயில் நிலையச் சொத்துக்களைப் பாதுகாத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கவேண்டும். ரயில் விடுதிகள், ரயில் நிலையம் ஆகியவற்றை சுற்றிப் போடப்பட்ட கிளிப்பர் கட்டைகள் கூட சமூக விரோத சக்திகளால் அகற்றப்படுகின்றன.

இம்மாதம் 2ஆம் திகதி ரயில் நிலையத்திலிருந்த பித்தளையிலான தராசு, மெரியரக தராசின் பித்தளை உதிரிப் பாகங்கள் ஆகியன திருடப்பட்டன.

இப்படி பிரதம ரயில் நிலைய அதிபர் தனது வேண்டுகோளில் தெரிவித்திருக்கிறார். (இ-எ)

அதிபர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம்

பலாலி, ஆக 8
இலங்கை விதியாலய தமிழ் அதிபர்கள் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறும்.

மேற்படி அதிபர்கள் சங்கத் தலைவர் திரு க. சோமசுந்தரம் தலைமையில் இக்கூட்டம் செங்குந்தா இந்துக் கல்லூரியில் காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

புதிய வருட உத்தியோகத்தர் தெரிவு உம்பட, 4 ஆம், 5 ஆம் அதிபர்களது பிரச்சினைகள் பற்றியும் ஆராயப்படவுள்ளதாக சங்கத் தலைவர் தெரிவித்தார். (இ-119)

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக 8
தனியார் போக்குவரத்துச் சேவை தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 30 மணிக்கு நல்லூர் இந்து விடுதியில் குழுக் கூட்ட அறையில் நடைபெறும்.

யாழ். பஸ் நிலையத்திற்கு அருகாமையிலும், அதற்கு அண்மையிலும் மினி பஸ்களை நிறுத்துவதில் ஏற்படும் அசௌகரியங்களை நீக்குவது பற்றியும்—

பிரயாணிகள் சிரமமின்றி மினி பஸ்களில் ஏறிச் செல்வதற்குரிய ஒழுங்குமுறையை ஏற்படுத்தி, மினிபஸ் சேவையை சீராக நடத்துவது பற்றியும்—

இச்சேவை தொடர்பாகவுள்ள ஏனைய பிரச்சினைகள் பற்றியும் இக் கலந்துரையாடலில் ஆராயப்படும். (உ-10)

உயிர் காக்கும் சஞ்சீவி

இன்றைய இக்கட்டான காலகட்டத்தில் உங்கள் உடன் பிறப்புக்களின் உயிர்கள் விலைமதிக்க முடியாத, திரும்பப் பெற இயலாத மாபெரும் சொத்துக்கள்.

மரணத்துடன் போராடுபவரை நீங்களும் காப்பாற்றலாம்

உயிர் காப்பது உன்னத பணி

யாழ் ஆஸ்பத்திரி
இரத்த வங்கி
உங்கள் வரவை
எதிர்பார்த்து நிற்கிறது

இரத்ததானம் செய்யுங்கள்!

விரைந்து செய்வீர்!!

தொடர்ந்து செய்வீர்!!!

தானத்தில் சிறந்தது இரத்ததானம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சார நிலைய வீதி, இரண்டாம் ஒழுங்கை 15 - ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்லிக்கேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 08 — 08 — 1986

Printed and Published by Uthayan Publications (Private) Ltd. 15 Second Lane, Power House Road, JAFFNA.

Registered as a Newspaper at the General Post Office. Sri Lanka Under Number QJ 60 N 86.

வல்வெட்டித்துறையில்

சிப்பாய்கள் வெளியே வர மோதல் மூண்டது

வல்வெட்டித்துறை, ஆக 8
புலிகிழமை இரவு சுமார் 11-00 மணியளவில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமில் இருந்து சிருடையினர் வெளிவேலை முயன்றபோது பொராளிகளால் எதிர்தாக்குதல் நடத்தப்பட்டது.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து வல்வெட்டித்துறை, பொலிகண்டி, தொண்டமனறு பகுதிகளில் முப்படைகளின் தாக்குதல்கள் நடைபெற்றன.

இராணுவ முகாமில் இருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் சில வீடுகள் சேதமடைந்தன.

பொலிகண்டிப் பகுதியில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களின் படகு கடற்படையினரால் சேதமாக்கப்பட்டது மீனவர் இருவரும் கடலில் குதித்தனர். இருவருள் எஸ் கௌதமராஜா (24 வயது) கரை வந்து சேர்ந்தார்.

மற்ற மீனவரான ப. சிவனேஸ்வராராஜாவை (23 வயது) கடற்படையினர் கொண்டு சென்றதாகத் தெரிகிறது (இ-ரி)

தந்தையின் துப்பாக்கி தனயனுக்கு எமன்

திருகோணமலை, ஆக. 8
ஊர்காவல் படையைச் சேர்ந்த தந்தையின் துப்பாக்கியால் சுடு தனயன் தற்கொலை செய்து கொண்டான்.

இச்சம்பவம் சுந்தரவாவானுறப் பகுதியில்நடைபெற்றது.

இறந்தவனின் பெயர் எம். ஜி. ஆரிபரத்தினம். தற்கொலை என்று திருமலை நீதிவான் திரு. சுனில் ராஜபக்ஸ தீர்ப்பளித்தார். (இ-எ-150)

டிராக்டரும் கடத்தப்பட்டது

மட்டக்களப்பு, ஆக 8
மட்டக்களப்பில் கடத்திச் செல்லப்பட்டுக் கொலைப்பட்ட பாடசாலை அதிபர் திரு. சிவலிங்கத்திற்குச் சொந்தமான 2 லட்சம் ரூபா பெறுமதியான டிராக்டரும் இனந்தெரியாதவர்களினால் கடத்திச் செல்லப்பட்டதாம்.

சிவலிங்கத்தின் மரண விசாரணையில் ஆரியமலர் சமலபூரணம் சாட்சியமளிக்கையில் மேற்கண்ட தகவல் வெளியிட்டார்.

திரு மரண விசாரணை அதிகாரி திரு த. சிவநாதன் மரண விசாரணையை நடத்தினார்.

கொலை என்று தீர்ப்பளிக்கப்பட்டது (இ-எ-21)

ஓய்வூதிய . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வெட்டித்துறை, சங்கானை, கொழுவாமம், அனலைட்டி.

22-8-86:-
வட்டுக்கோட்டை, மானிப்பாய், உரும்பராய், பண்டத்தரிப்பு, வேலணை

25-8-86:-
சுன்னாகம், அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, கொக்குவில்.

26-8-86:-
தெல்லிப்பளை, சோப்பாய், வண்ணார்பண்ணை, காரைநகர்த்துறை.

27-8-86:-
கரவெட்டி, ஊர்காவற்துறை, அச்சுவேலி, வயாவிளான்

28-8-86:-
காரைநகர், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், கழிபுரம் (இ-5)

கடத்தப்பட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டவர்கள் பெயர்கள் வருமாறு;

1. திரு. எஸ். மகாலிங்கம். (திரு சம்பந்தமூர்த்தியின் தம்பி)
2. கே. பஞ்சாட்சரம்
3. பி குணபாலசிங்கம். (விவசாய அதிகார சபை முகாமையாளர்)
4. எஸ் தங்கராசா (செங்கலடி இராமகேசவையாளர்)
5. எஸ். மகேந்திரன் (புகைப்படப் பிடிப்பாளர்)
6. பி. நடராசா (பெற்றோல்நிலைய உரிமையாளர்). (இ-எ-21)

3 மாணவர் . . .

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)
முடிகிறது. இவ் 'ரூக்கிங்' கால் சில மாணவர்கள் உளரீதியாக மிகக் கடுமையான பாதிப்புக்குள்ளாகி மன நோயாளிகளாகி விட்டனர் என்று சமூகப் பொறுப்புக்குரிய உணர்வோடு எம் கலாசாரத்தைப் பாதுகாத்து இச் சமூக அடாவடித்தனத்தை கட்டுப்படுத்த வேண்டிய கடமை விடுதலையை மூக்கொடுக்கும் சக்திகளுக்குண்டு.

கடந்த முறை இது சம்பந்தமாக நாம் பூரண விசாரணை நடத்திய நிலையிலும், மிக மோசமாக அடாவடித்தனங்களில் ஈடுபட்டவர்கள் வன்செயல்களிலிருந்தும்; கடந்தமுறை இடம்பெற்ற பாலியல் ரீதியான சங்கிலை முடியாத செயற்பாடுகளும் ஏனைய உடலியல், உளவியல் செயற்பாடுகளும் மிகத் துல்லியமாக நிரூபிக்கப்பட்டுள்ளன. எனவே 'ரூக்கிங்' செய்ய வேண்டாமென விரிவான அறிக்கை மூலமும் கலரொட்டி மூலமும் ஏற்கனவே எச்சரிக்கை விடுத்திருந்தோம்.

இம்முறை புதிய மாணவர்கள் வந்த முதல் நாளே எமக்குத் தெரிந்த வகையில் ஓர் மாணவி, பல் கலைக்கழக வளாகத்தில் வெளியே மிக மோசமாக 'ரூக்கிங்' செய்யப்பட்டுள்ளார்.

மேலும் சமுதாய ரீதியில் சாதாரண ஓர் பொதுமகன் "பகிடிவதை கழக மாணவர்கள்" என்ற போர்வையில் சமூக விரோத செயற்பாடுகள் செய்வதை அனுமதிக்க முடியாது.

மேலும் ஓர் இளம் பெண்ணுக்கு ஏற்பட்ட பாதிப்பைச் சகிக்கவும் முடியாது

எனவே இச்சமூக அடாவடித்தனத்தைக் கட்டுப்படுத்துமுகமாகவும் ரூக்கிங்கை பூரணமாகக் கட்டுப்படுத்துமுகமாகவும் இம்முறை ரூக்கிங் நடவடிக்கையில் ஈடுபட்ட மூன்று பல்கலைக்கழக மாணவர்களை விசாரணை செய்த அவர்கள் குற்றத்தை நிரூபித்து அதற்குரிய தண்டனையை வழங்கி விடுதலை செய்கிறோம்.

எனவே பல்கலைக்கழக ரீதியில் இடம்பெறும் "ரூக்கிங்" என்ற மோசமான செயற்பாட்டை முற்றாக நிறுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். மீறி "ரூக்கிங்" நடவடிக்கையில் ஈடுபடுவர்கள் அதற்குரிய எதிர் விளைவுகளை எதிர்நோக்க வேண்டி நேரிடும் என இறுதியாக எச்சரிக்கிறோம்

மேலும் ஓர் நியாயமாகவும் நீதியாகவும் மாணவர்களின் பிரச்சினைகளாகவும் ஓர் சமூக அடாவடித்தனத்திற்கெதிராகவும் நாம் விசாரணை செய்து தீர்ப்பளித்ததற்கு இடையூறாக அமைந்த ஒருசில தீய சக்திகள் சம்பந்தமாகவும் நாம் பேசினால் மனவருத்தம் அடைகிறோம்.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வயாவிளான் முகாமை அகற்றும் உத்தரவு இன்னும் கொழும்பிலிருந்து வரவில்லை

பலாலி, ஆக 8
வயாவிளான் கிராமிய நியாலயத்தில் அமைந்துள்ள மினி முகாமை அல்லிடத்தை விட்டு அகற்றுவதாக பலாலி இராணுவமுகாம் பொறுப்பதிகாரி பிரிகேடியர் ருவன்சா, பாடசாலை அபிவிருத்திச்சபையினர், பிரசைகள் குழுவினருடன் உறுதியளித்திருந்தும் பாதுகாப்பு அமைச்சின் உயர்பீடத்திலிருந்து இது பற்றிய உத்தரவு எதுவும் வரவில்லை என அறிய வருகின்றது.

எனினும் மினி முகாமை பலப்படுத்தும் முயற்சி தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றது.

நேற்று பலாலியிலிருந்து டிரக்குகளில் ஹெலிக்கொப்டர் பாதுகாப்புடன் பலாலி பாய்கள் வயாவிளான் முகாமுக்கு வந்து சேர்ந்தனர்.

நேற்று வழமைக்கு மாறாக இரண்டு ஹெலிக்கொப்டர்கள் தொடர்ச்சியாக மாறிமாறி நாள் முழுதும் பறந்தன.

வயாவிளான் முகாமில் இருந்து கும்பசிட்டி அண்ணமார் கோவிலடி மடம் வந்து இறந்து நின்ற சிப்பாய்களின் லையில் அகப்பட்ட வலோடிய சேற்றெறிலாளி ஒருவர் மோசமாகத் தாக்கப்பட்டார் எனச் சொல்லப்படுகிறது.

கும்பசிட்டியைச் சேர்ந்த திரு தவராசா என்பவரது வீடும் நேற்று கடைக்கப்பட்டது.

கும்பசிட்டியைச் சேர்ந்த திரு இரத்தினசிங்கம் என்பவரது வீட்டுக்கு அண்மையில் இரண்டு சடலங்கள் துப்பாக்கிக் காயங்களுடன் உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்தவாரம் இராணுவத்தால் கைது செய்யப்பட்ட பலர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-119)

இருவர் கைது

யாழ்ப்பாணம், ஆக. 8
யாழ்ப்பாணத்திலிருந்து அனுராதபுரம் சென்று கொண்டிருந்த பஸ் ஒன்றை வழி மறித்துச் சோதனை நடத்திய சிப்பாய்கள் இரண்டு இளைஞர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட இளைஞர்கள் புங்குடுதீவைச் சேர்ந்த சுப்பையா பாலசிங்கம் (வயது 23) சின்னையா சின்னராசா (வயது 24) என்று தெரிய வருகிறது. (இ-10)

பாண்டிருப்பில் கைதானோரை விடுவிக்க கோரிக்கை

கல்முனை, ஆக. 8
பாண்டிருப்பில் ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டவர்களில் இன்னும் விடுவிக்கப்படாமல் இருப்பவர்கள் குறித்து கல்முனைப்பிரசைகள் குழுத் தலைவர் திரு. வெஸ்லி கந்தையா கல்முனை அதிரடி பொலீஸ் அதிகாரியை நேற்றுச் சந்தித்தார்.

நிரபராதிகளான இவர்களை உடனடியாக விடுவிக்கும்படி அப்போது அவர் கேட்டுக்கொண்டார். (இ-எ-84)

அரியாலையில் இரத்ததான நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஆக 8
அரியாலை சனசமூக நிலையத்தில் நாளை சனிக்கிழமை காலை ஒன்பது மணிக்கு இரத்ததான நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் ஏற்பட்டுவரும் இரத்தப் பற்றாக்குறையை நீக்குமுகமாக காம் செய்யப்படுகிறது. கல்லூரி இரத்தப் பட்ட கழகத்தினர் இந்நிகழ்ச்சியை ஒழுங்கு செய்துள்ளனர். (இ-10)

பிரார்த்தனை

சாவகச்சேரி, ஆக. 8
சாவகச்சேரி புவிதவிநாயகர் தேவாலய நவநாள் ஆராதனையின் இறுதி நாளன்று வண்செயல்களின் போது உயிரிழந்த அனைவரதும் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை நடைபெற்றது.

வண. பிதா. ஜே ஏ. கருணாரன் ஆராதனையை மிருதலில் பங்குத்தந்தை அன்ரன் செல்வராசா அடிகளாரின் உதவியுடன் இதனை நடாத்தி வைத்தார். (உ-31)

ஹோலந்தில் "பாலாடை" ஆராய்ச்சி

ரொட்டர்டாம், ஆக 7
ஹோலந்து பாராளுமன்ற சபை நடத்தும் ஆராய்ச்சியிலேயே வெற்றி கண்டாக, ஹோலந்து மக்கள் 'பாலாடை' அணிவர்.

மேலதிகமாகக் கிடைக்கும் பாலில் இருந்து ஆடை அணியும் ஆராய்ச்சி தற்சமயம் ஹோலந்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

ஹாலில்இருந்துபிறந்தாரி-பது ஹோலந்தில் ஏற்கனவே நடைமுறைக்கு வந்து விட்டது (இ-எ)

சிரமதானம்

மன்னார், ஆக 8
நாளுட்டாள் வங்காலை பிரதான வீதி சிரமதானம் மூலம் திருத்தப்பட்டது.

400 பேர் சிரமதான வேலைகளில் ஈடுபட்டனர் 22 உழவு இயந்திரங்களும் சிரமதானத்தில் போது பயன்படுத்தப்பட்டன. (இ)

ஆயுள்தண்-

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
தண்டனை விதிக்கப்பட்டது. இரு தண்டனைகளையும் ஏக காலத்தில் அனுபவிக்க வகை செய்யப்படும்.

1982 ஜூலைமாதம் இத்தாலிய விமானம் ஒன்றைக் கடத்தியதாக எகிப்த நாயகர்மீது குற்றங்கள் சுமத்தப்பட்டன. (இ-எ)

அவர்கள்...

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இவர்கள் ரோந்துசெல்வதுபோல் பாசாங்கு பண்ணிவீடுகளில் உள்ள ஆடுகளையும், கோழிகளையும் விசாரித்துப் பிடித்தனராம்.

முஸ்லிம் பெண் மணி ஒருவரைக் கைது செய்த சிப்பாய்கள் பின்னர் விடுவித்தனர் என்றும் அறிய வருகிறது. ஆடுகளையும் கோழிகளையும் சிப்பாய்கள் கொண்டு சென்றுள்ளனர்.

இது தொடர்பாக இப்பகுதி மக்கள் வவுனியா அரசாங்க அதிபரிடமும் வவுனியா இணைப்பதிகாரியிடமும் முறையிட்டுள்ளனர் (இ-10)

தந்திரிமலை..

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
ணுவத்துடன் மக்கள் விடுதலைப் படையினர்கள் ஒன்றரை மணி நேரம் நேரடி மோதலில் ஈடுபட்டனர்.

இச் சம்பவத்தில் தமது தரப்பில் இழப்பு எதுவும் இல்லை என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

எஸல . . .

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
5 பாரிய வாகனங்கள், 68 லாக்கிடோக்கிகள், 15 பொலீஸ் நாய்கள் மாதுபாப்புப் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் 19 ஆம் திகதி பிரதான பெரஹெரா ஊர்வலம் நடைபெற உள்ளது. (இ-எ)

கிளிநொச்சி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)
கள் அனைவரையும் உடன் வேலைக்கு வருமாறும் இளைஞர்சேவை இராணுவ உயர் அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

இதனை அடுத்து இன்று சகல ஊழியர்களும் நாளை சுகாதாரத் நிலையத்தில் சந்திக்க உள்ளனர். (இ-10)

மட்கோவ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பொருள்கள் பலவற்றை அகற்றிச் சென்றனர் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன (இ-எ-150)

நகல்யோசனை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
னைத் திருத்தியுள்ளது. அத்திருத்தங்களை ஏனைய கட்சிகள் இந்திய மாநிலங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள், இந்திய [illegible] சமஷ்டி அமைப்பு [illegible] ஆகியவற்றைக் [illegible] தக்கது. (ஆ-எ)

துப்பாக்கி வெடித்து மரணம்

திருகோணமலை, ஆக. 8
தற்செயலாகத் துப்பாக்கி வெடித்து ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவர் மரணமானார்.

திருமலை, முதலிக்குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவரின் பெயர் சுசிந்தகுமார, வயது 19. துப்பாக்கியைத் தோளில் வைத்தபடி உறவினருடன் பேசிக் கொண்டிருக்கையில் தற்செயலாக துப்பாக்கி வெடித்து அவரைத் தாக்கியது. அந்த இடத்திலேயே அவர் மரணமானார்.

விபத்து மரணம் என்று திருமலை மரணவிசாரணை அதிகாரி யு. பி. குணசேகரா தீர்ப்பளித்தார். (இ-எ-150)

பொத்துவில் சம்பவம்: புலிகள் அறிக்கை

யாழ்ப்பாணம், ஆக 8
பொத்துவிலில் சோர்ந்து சென்ற கமான்டோக்களுடன் விடுதலைப் புலிகள் நேரடி மோதலில் ஈடுபட்டதாக அறிவிக்கப்படுகிறது.

இது சம்பந்தமாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த அறிக்கை வருமாறு!

சொகுதலில் இராணுவ முகாமிலிருந்து கமான்டோக்கள் ஒரு ஜீப்பிலும் ஒரு டிரக்கிலுமாக எதிர்பாராமல் சோர்ந்து வந்த சமயம் எம்மவர்கள் ஜீப் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

ஜீப் சாரதி நிலைதடுமாறியதில் வேகமாக வந்த ஜீப் மரமொன்றுடன் மோதுண்டது.

அதில் இருந்தவர்கள் பலத்த காயங்களுக்கு உள்ளானார்கள்.

டிரக்கில் வந்தவர்களுக்கும் எமது தரப்பினருக்குமிடையில் சிலமணி நேரம் இடம்பெற்ற நேரடி மோதலின் பின்பு கமான்டோக்கள் பின்புறமாகவே இழப்புக்களுடன் திரும்பிச் சென்றனர்.

இத்தாக்குதலின்போது எமது தரப்பில் எதுவித இழப்புக்களும் இல்லை.

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது (இ)

'புளொட்' அமைப்பில் பிளவு எதுவும் இல்லை

உமா அறிவிப்பு

சென்னை, ஆக 7
தமிழீழ மக்கள் விடுதலைக் முன்னணி பிளவு எதுவும் இல்லை.

— இப்படி கழகத் தலைவர் திரு. உமாமகேஸ்வரன் அறிவித்திருக்கின்றார்.

பத்திரிகை அறிக்கை ஒன்றில் அவர் மேலும் கூறியிருப்பதாவது:

கழகத்தில் உள்ள ஒரு பிரிவினர் எனக்கு எதிராகச் கமத்திய குற்றச்சாட்டுகள் கற்பனையானவை.

என் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் ஆதாரங்களை அவர்களால் நிரூபிக்க முடியவில்லை.

போட்டிப் பிரிவினர் நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தங்கள் அரசியல் நோக்கம், எதிரியைச் சந்திக்க கடைப்பிடிக்கப்படும் உத்திகள் பற்றி அவர்கள் கூறவில்லை.

சமரசம் தேடிய விடுதலை முன்னணியுடன் சேருவது பற்றி மட்டுமே கூறினார்கள்

எதிரியைத் தாக்கவும் எதிரியிடமிருந்து எமது மக்களைக் காப்பாற்றவுமே ஆயுதங்கள் உள்ளன.

எமது போராட்டத்தில் சகோதரர்களுக்கு எதிராக பயன்படுத்துவதற்கு ஆயுதங்கள் பாவிக்கப்படக் கூடாது. இதனைப் போட்டிப்பிரிவினர் அங்கீகரிக்க வேண்டும்.

இப்படி அந்த பத்திரிகைக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. (உ-எ)

துப்பாக்கி வெடித்து மரணம்

திருகோணமலை, ஆக. 8
தற்செயலாகத் துப்பாக்கி வெடித்து ஊர்காவற் படையைச் சேர்ந்த ஒருவர் மரணமானார்.

திருமலை, முதலிக்குளம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இறந்தவரின் பெயர் சுசிந்தகுமார, வயது 19. துப்பாக்கியைத் தோளில் வைத்தபடி உறவினருடன் பேசிக் கொண்டிருக்கையில் தற்செயலாக துப்பாக்கி வெடித்து அவரைத் தாக்கியது. அந்த இடத்திலேயே அவர் மரணமானார்.

விபத்து மரணம் என்று திருமலை மரணவிசாரணை அதிகாரி யு. பி. குணசேகரா தீர்ப்பளித்தார். (இ-எ-150)